DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No.40/2022

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.13

(Accused present)

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.புவனேஷ்வரன் | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 01st day of October, 2024.

முதல் விசாரணை

நான் தற்போது அழகாபுரி காந்தி நகரில் வசித்து வருகிறேன். நான் பெயிண்ட் அடிக்கும் தொழில் செய்து வருகிறேன், எப்போதாவது ஆட்டோ ஓட்டும் தொழில் செய்வேன். ஆஜர் எதிரியை தெரியாது. அவரை நான் பார்த்தது கிடையாது. நான் அழகாபுரி பஸ் நிறுத்தத்தில் உள்ள ஆட்டோ ஸ்டாண்டில் ஆட்டோ ஓட்டிவருகிறேன். சாட்சி ராஜேஷ்–ஐ தெரியும். அவரும் ஆட்டோ ஓட்டும் தொழில் செய்து வருகிறார். சுமார் 2 வருடத்திற்கு முன்பு போலீஸார் ஆட்டோ ஸ்டாண்டில் வந்து நானும், ராஜேஷும் இருந்தபோது கையெழுத்து வாங்கினார்கள். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. போலீஸார் என்னை விசாரித்தார்கள். (சாட்சியை பிறழ்சாட்சியாக மாற்ற அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை)

போலீஸார் விசாரணையில் கடந்த 09.11.2021ம் தேதி இரவு 08.15 மணிக்கு நானும், என்னுடன் ஆட்டோ ஓட்டும் ராஜேஷும் அழகாபுரி ஆட்டோ ஸ்டாண்டில் இருந்தபோது அங்கு வந்த திருத்தங்கல் காவல் நிலைய போலீஸார் அவர்கள் வந்த காரில் இருந்த நபரை காட்டி இவனை சவாரி எதுவும் கூட்டிச்சென்றுள்ளாயா என்று கேட்டார்கள் என்றும், அதற்கு நான் ஆமாம் சார் முந்தா நாள் இரவு 08.00 மணியளவில் நானும், ராஜேஷும் ஆட்டோ ஸ்டாண்டில் இருந்தபோது, இவர் ஆட்டோ கிட்ட நடந்து வந்து வளையங்குளம் சவாரி போகவேண்டும் என்று கேட்டதாகவும், நான் 150 ரூபாய் ஆகும் என்று சொன்னதாகவும், அவரும் ஒப்புக்கொண்டதால் அவரை ஆட்டோவில் ஏற்றி சென்றுகொண்டிருந்தபோது என்னிடம் மணி என்ன என்று கேட்டு, நான் மணியை சொன்னதாகவும், அதன்பின் வளையங்குளம் விலக்கு அருகே என்னை ஆட்டோவை நிறுத்தச்சொன்னார் என்றும், அதற்கு நான் ஊருக்குள் போய் இறக்கிவிடுகிறேன் என்று சொன்னதற்கு அவர் என்னிடம் நான் சொன்ன இடத்தில் மட்டும் இறக்கிவிட்டால் போதும் என்று சண்டைக்கு வருவதுபோல் பேசியதாகவும், நான் வளையங்குளம் விலக்கு அருகேஅவரை இறக்கிவிட்டேன் என்றும், அதன் பிறகு ஆட்டோ ஸ்டாண்டிற்கு வந்துவிட்டேன் என்றும், போலீஸார் விசாரித்தபோது தான் தெரியும் அந்த நபர் கொலை செய்துவிட்டு தப்பித்து வந்ததால் தன்னை ஊர் விலக்கிலேயே இறக்கிவிடச்சொல்லி போனது தெரிந்தது என்று கூறிவிட்டு தற்போது எதிரி கேட்டுக்கொண்டதற்கிணங்க உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை– இல்லை</u>

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No.40/2022

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.14

(Accused present)

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.ராஜேஷ் | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 01st day of October, 2024.

முதல் விசாரணை

நான் தற்போது அழகாபுரி காந்தி நகரில் வசித்து வருகிறேன். சாட்சி புவனேஷ்வரனை தெரியும். அவர் ஆட்டோ ஓட்டி வருகிறார். நானும் ஆட்டோ ஓட்டி வருகிறேன். அழகாபுரி ஸ்டாண்டில் இருவரும் தனித்தனியே ஆட்டோ வைத்து ஓட்டி வருகிறோம். சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பு ஆங்கில மாதம் 9 ம் தேதி எம்.புதுப்பட்டி சார்பு ஆ்யவாளர் எங்கள் ஆட்டோ ஸ்டாண்டிற்கு இரவு 08.45 மணிக்கு வந்தார். அவருடன் காவல் ஆய்வாளரும் வந்தார். காரில் வந்தார்கள். யாரும் சந்தேகப்படும்படி வந்தார்களா என்று கேட்டார்கள். யாரும் தெரியவில்லை என்று சொன்னேன். வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் தெரியாது. போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சியை பிறழ்சாட்சியாக மாற்ற அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை)

போலீஸார் விசாரணையில் கடந்த 09.11.2021 ம் தேதி இரவு 08.15

மணிக்கு நானும், என்னுடன் ஆட்டோ ஓட்டும் புவனேஷ்வரனும் அழகாபுரி ஆட்டோ ஸ்டாண்டில் இருந்தபோது அங்கு வந்த திருத்தங்கல் காவல் நிலைய போலீஸார் அவர்கள் வந்த காரில் இருந்த நபரை காட்டி இவனை சவாரி எதுவும் கூட்டிச்சென்றுள்ளாயா என்று கேட்டார்கள் என்றும், அதற்கு நான் ஆமாம் சார் முந்தா நாள் இரவு 08.00 மணியளவில் நானும், புவனேஷ்வரனும் ஆட்டோ ஸ்டாண்டில் இருந்தபோது, இவர் ஆட்டோ கிட்ட நடந்து வந்து வளையங்குளம் சவாரி போகவேண்டும் என்று கேட்டதாகவும், புவனேஷ்வரன் 150 ரூபாய் ஆகும் என்று சொன்னதாகவும், அவரும் ஒப்புக்கொண்டதால் அவரை ஆட்டோவில் ஏற்றி சென்று கொண்டிருந்தபோது புவனேஷ்வரனிடம் மணி என்ன என்று கேட்டு, அவர் மணியை சொன்னதாகவும், அதன்பின் வளையங்குளம் விலக்கு அருகே நாங்கள் வந்த ஆட்டோவை நிறுத்தச்சொன்னார் என்றும், அதற்கு புவனேஷ்வரன் ஊருக்குள் போய் இறக்கிவிடுகிறேன் என்று சொன்னதற்கு அவர் புவனேஷ்வரனிடம் நான் சொன்ன இடத்தில் மட்டும் இறக்கிவிட்டால் போதும் என்று சண்டைக்கு வருவதுபோல் பேசியதாகவும், புவனேஷ்வரன் வளையங்குளம் விலக்கு அருகே அவரை இறக்கிவிட்டார் என்றும், அதன் பிறகு ஆட்டோ ஸ்டாண்டிற்கு வந்துவிட்டோம் என்றும், போலீஸார் விசாரித்தபோது தான் தெரியும் அந்த நபர் கொலை செய்துவிட்டு தப்பித்து வந்ததால் தன்னை ஊர் விலக்கிலேயே இறக்கிவிடச் சொல்லி போனது தெரிந்தது என்று கூறிவிட்டு தற்போது எதிரி கேட்டுக்கொண்டதற்கிணங்க உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை– இல்லை</u>

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No.40/2022

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.15

(Accused present)

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.குமார் (எ) காஜா குமார் | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 01st day of October, 2024.

முதல் விசாரணை

நான் தற்போது எரிச்சநத்தம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் குமிளங்குளம் பேருந்து நிறுத்தத்தின் அருகே கோழிக்கடை வைத்துள்ளேன். கடந்த 2021ம் ஆண்டு ஆங்கில மாதம் 9ம் தேதி போலீஸார் என் கடைக்கு வந்தார்கள். எங்கள் கடைக்கு பின்னால் குஞ்சாங்குளம் நாயக்கர் காட்டில் புதருக்குள் இருந்து சாதாரணமாக இருந்த ஒரு டிரௌசரை எடுத்தார்கள். சுமார் 25 வயது மதிக்கத்தக்க ஒரு நபரை அழைத்துவந்து ஜீப்பில் இருந்து அவர் சொல்ல போலீஸார் சென்று டிரௌசரை எடுத்தார்கள். ஆஜர் எதிரி தான் ஜீப்பில் இருந்தவர். அதற்கு முன்பு ஆஜர் எதிரியை நான் பார்ததில்லை. இது சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்குவிசாரணை

எங்கள் கடைக்கு பின்னால் குஞ்சாங்குளம் நாயக்கர் காட்டில் புதருக்குள் இருந்து சாதாரணமாக இருந்த ஒரு டிரௌசரை எடுத்தார்கள். சுமார் 25 வயது

மதிக்கத்தக்க ஒரு நபரை அழைத்துவந்து ஜீப்பில் இருந்து அவர் சொல்ல போலீஸார் சென்று டிரௌசரை எடுத்தார்கள். ஆஜர் எதிரி தான் ஜீப்பில் இருந்தவர் என்று முதல் விசாரணையில் சொன்ன விவரம் போலீஸார் சொல்லிக்கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரியை இன்று போலீஸார் அடையாளம் காட்டி தான் நீதிமன்றத்தில் அவரை அடையாளம் காட்டுகிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No.40/2022

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.16

(Accused present)

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.கேத்தைய்யா | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 01st day of October, 2024.

முதல் விசாரணை

நான் தற்போது எரிச்சநத்தம், ஈ.புதுப்பட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் லோடு மேனாக வேலை பார்க்கிறேன். கடந்த 09.11.2021ம் தேதி மாலை 04.30 மணிக்கு என்னை ஆய்வாளர், சார்பு ஆய்வாளார், காவலர்கள் வந்து என்னை அழைத்தார்கள். ஒரு செல்போன் குமிளங்குளம் கண்மாயில் விழுந்துவிட்டதாகவும், அதை எடுத்துதருமாறும் கேட்டுக்கொண்டார்கள். ஆஜர் எதிரியின் செல்போன் குமிளங்குளம் கண்மாயில் விழுந்துவிட்டதாக சொன்னார்கள். ஆஜர் எதிரியும் அப்போது போலீஸாருடன் இருந்தார். நான் முங்கிப்பார்த்தேன். செல்போன் கிடைக்கவில்லை. இதுசம்மந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்குவிசாரணை

ஈ.புதுப்பட்டி கிராமத்திற்கும் குமிளங்குளம் கண்மாய்க்கும் இடையே சுமார் அரை கி.மீ தூாரம் இருக்கும். இதற்கு முன்னர் பலமுறை போலீஸார் கேட்டுக்கொண்டு பொருட்கள் எதுவும் எடுத்துக்கொடுத்தேனா என்றால்

இல்லை. போலீஸாருக்கும் எனக்கும் நெருங்கிய உறவு இருந்ததா என்றால் இல்லை. நான் லோடு மேன் வேலை செய்வதால் போலீஸார் தயவு வேண்டும் என்பதால் முதல்விசாணையில் சொன்ன விவரங்கள் அனைத்தும் போலீஸார் சொல்லிக்கொடுத்து சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரியை இன்று போலீஸார் அடையாளம் காட்டி தான் நீதிமன்றத்தில் அவரை அடையாளம் காட்டுகிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.